11th August 1965]

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Madras (Transferred Territory) Extension of Laws Bill, 1965 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

V—ANNOUNCEMENTS—*cont.*

(iv) THE INDIAN PARTNERSHIP (MADRAS AMENDMENT) BILL, 1965.

MR. SPEAKER : I have to announce to the House that the Governor has given his recommendation to the consideration by the Madras Legislative Assembly of the Indian Partnership (Madras Amendment) Bill, 1965.

VII—GOVERNMENT BILLS—*cont.*

(2) THE INDIAN PARTNERSHIP (MADRAS AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg to introduce the Indian Partnership (Madras Amendment Bill, 1965 and move—

'That the Bill be taken into consideration'.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சட்டத்திலே 'Crown', 'Emperor', 'Empress', 'Empire', 'Imperial', 'King', 'Queen', 'Royal' போன்ற பெயர்களை உபயோகிக்கக்கூடாது என்று இருக்கிறது. அதை விட்டுவிட்டு அதைப் போலவே, 'Union', 'State', 'President', Republic', 'Municipal', 'Chartered போன்ற பெயர்களை உபயோகிக்கக்கூடாது என்பது ஒரு திருத்தம்.

இரண்டாவது திருத்தம், ஒரு 'பேர்மை' ரிஜிஸ்டர் செய்வதற்கு செலவு அதிகமாக ஆகிறது. அதனால், இப்பொழுது இருக்கிற கட்டண முறையையும் அதிகரிப்பதற்காக புது ஷெட்யூல் கொடுத்திருக்கிறோம். இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The motion is now before the House for discussion.

திருமதி டி. என். அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொன்னபடி 'கிரௌன்', 'எம்பரர்' 'எம்ப்ரஸ்' போன்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, 'யூனியன்' 'ஸ்டேட்' 'பிரெசிடெண்ட்', 'ரிப்பப்ளிக்', 'முனிசிபல்' 'சார்டர்டு' என்ற வார்த்தைகள் இருந்தாலும் அதை ரிஜிஸ்டர் செய்யக் கூடாது என்ற நிலை இருக்கும். ஆனால், தற்பொழுது 'தேசிய' என்று போட்டால்கூட, ரிஜிஸ்டர் செய்ய மாட்டேன் என்று சொல்கிறார்கள். தேசிய சங்கம் என்று போட்டால்கூட, அது யூனியனைக் குறிக்கிறது, இதைக் குறிக்கிறது அதைக் குறிக்கிறது என்றெல்லாம் சொல்லிவிடுகிறார்கள். குழப்பத்திற்கு இடம்

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 15th July 1965.

[திருமதி டி. என். அனந்தநாயகி] [11th August 1965

இல்லாமல் தமிழ் வார்த்தைகள் எப்படி இருந்தால் ரிஜிஸ்டர் செய்யக்கூடாது என்று சொல்லி விட்டால், இந்த வார்த்தைகளுக்கு கரெஸ்பாண்டிங் டெர்ம் கரெக்டாகச் சொல்லிவிட்டால், அந்த ஆபீசர் இந்த வார்த்தைகளுக்கு வேறு இண்டர்பிரடேஷன் கொடுத்து தொல்லை கொடுக்க முடியாது. தேசிய மன்றங்கள் என்றால் ரிஜிஸ்டர் செய்யமாட்டேன் என்று சொல்லுகிறார்கள். 'தேசிய' என்றால் தேசத்தைக் குறிக்கக்கூடும் என்று சொல்கிறார்கள். ஆகவே, குழப்பத்திற்கு இடமில்லாமல் சுத்தமாக இந்தத் தமிழ் வார்த்தைகள் இருந்தால், ரிஜிஸ்டர் செய்யமாட்டேன் என்று சொல்லலாம். மற்ற வார்த்தைகளை ஆட்சேபிக்கக்கூடாது என்று திட்டவட்டமாகப் போட்டுவிட்டால் நல்லது என்று நினைக்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ் கிளாஸரியில் இந்த வார்த்தைகளுக்கு என்ன தமிழ்ப் பதங்கள் என்று போட்டிருக்கிறோம். அந்தப் பதங்களைத் தவிர, மற்றவைகளை உபயோகித்தால், சட்டப்படி செல்லும். அந்தப் பதங்களுக்கு தமிழ் கிளாஸரியில் கொடுத்திருக்கிற வார்த்தைகளில் 'தேசிய' என்று குறிப்பிடப்பட்டிருந்தால், அவர்கள் அதை உபயோகிக்க முடியாது. நாம் இப்பொழுது உபயோகிக்கக் கூடாது என்று சொல்லக்கூடிய வார்த்தைகளுக்கு, யூனியன், ஸ்டேட், பிரெசிடெண்ட், ரிபப்ளிக், முனிசிபல், சார்டர்டு இந்த மாதிரி வார்த்தைகளுக்கு தமிழ் கிளாஸரியில் என்ன பொருள் கொடுத்திருக்கிறார்களோ அந்த வார்த்தைகளை உபயோகிக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

'That the Indian Partnership (Madras Amendment) Bill, 1965 be taken into consideration.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 and 3 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

'That the Indian Partnership (Madras Amendment) Bill, 1965 be passed.'

The motion was put and carried and the Bill was passed.

(3) THE COTTON GINNING AND PRESSING FACTORIES (MADRAS AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI P. KAKKAN : Mr. Speaker, Sir, I beg to introduce the Cotton Ginning and Pressing Factories (Madras Amendment) Bill,[a] 1965 and move—

'That the Bill be taken into consideration.'

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 30th June 1965.